KANTON AARGAU

hallo — aargau.ch

# திறந்திருக்கும் நேரங்கள் / விடுமுறை நாட்கள்

சுவிஸில் அதிகமான கடைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் பூட்டியிருக்கும். இதற்கு புகையிரத நிலையத்திலுள்ள கடைகள் மட்டும் விதிவிலக்காகும். சட்டப்படியான விடுமுறை நாட்களை மாநிலமே ஒழுங்கு செய்யும்.

## விடுமுறை நாட்கள்

விடுமுறை நாட்கள் தொழிற்சட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. 1 ஆகஸ்ட் (தேசியவிடுமுறை நாள் ) சுவிஸ் முழுவதற்குமான சட்டப்படியான விடுமுறைநாள். அதை விட ஒவ்வொரு மாநிலத்திற்கும் 8 மேலதிகமான சட்டப்படியான விடுமுறை நாட்கள் உள்ளன. அறோ மாநில விடுமுறை நாட்கள் பிரதேசவாரியாக ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதேசத்திற்குமுள்ள 9 விடுமுறை நாட்களுள் 5 நாட்கள் முழு மாநிலத்திற்கும் பொதுவானவை. அவையாவன: புதுவருடம் (1 ஜனவரி ) பெரியவெள்ளி (ஈஸ்ரருக்கு முந்தைய வெள்ளி) மோட்சத்திருநாள் (ஈஸ்ரர் திங்களுக்கு 40 நாட்களின்; பின்புவரும் வியாழன் ) தேசிய விடுமுறைநாள் (1.ஆகஸ்ட் ) நத்தார் (25 மார்கழி )

## கடைகள் திறந்திருக்கும் நேரங்கள்

கடைகள் திறந்திருக்கும் நேரங்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். அறோ மாநிலத்தில் திறந்திருக்கும் நேரங்கள் அரசால் நிர்ணயிக்கப்படவில்லை. கோட்பாட்டின் படி ஒவ்வொரு கடையும் திங்கள் முதல் சனி வரை விரும்பிய நேரத்திற்குத் திறந்து பூட்டலாம். சனிக்கிழமைகளில் கடையைக் கிழமை நாட்களைவிட முன்பே பூட்டுவார் கள். ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகமான கடைகள் பூட்டியிருக்கும். விதிவிலக்காகப் புகையிரதநிலையக் கடைகள் சாதாரணமாக 7 நாட்களும் திறந்தும் மற்றைய கடைகளைவிட அதிகமாக முந்தித்திறந்தும் பிந்திப்பூட்டியும் இருக்கும்.

## அரச நிர்வாகங்கள் திறந்திருக்கும் நேரங்கள்

மாநில நிர்வாகங்கள் வழமையாக திங்கள் முதல் வெள்ளி 8 -12 மணி வரையும் 14 -17 மணி வரையும் திறந்திருக்கும். சில இடங்கள் பிற்பகல் 13.30 மணிக்குத் திறந்தும் அல்லது தொலைபேசியில் கூடிய நேரத்திற்கு தொடர்பு கொள்ள வசதியுமிருக்கும். கிராமசபை நிர்வாகங்கள் திறந்திருக்கும் நேரங்கள் வித்தியாசப்படும். எல்லாவற்றையும்விட ஆகச்சிறிய கிராமசபை நிர்வாகங்கள் திறக்கும் நேரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். முதலே இணையத்திலோ அன்றி தொலைபேசியிலோ திறந்திருக்கும் நேரங்கள் பற்றி அறிந்து கொள்ளச் சொல்லிப் பரிந்துரைக்கப்படுகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

dev.hallo-aargau.ch/ta/good-to-know/opening-hours--holidays